**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 17/2023**

**Date :12.03.2026**

**வா.சா. 1 - முருகேசன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 649/3 பி. வழக்கு பட்டிகை சொத்து சர்வே எண்649/3 பி எந்த ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 2016. 2016 ஆம் ஆண்டு சர்வே எண்649/3 ஏ மற்றும் 649/3 பி என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு தொட்டு தெற்கு பக்கம் கிழமேல் ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவிற்கு முன்பாக சர்வே எண் 649/3 ஆக இருந்தது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 649/3 ஆனது மேற்கு பக்கம் 3 ½ சென்ட் கிழக்கு பக்கம் 3 1/2 சென்ட் என்றால் சரிதான். மேற்படி மேற்கு பக்கம் 3 ½ சென்ட் கிழக்கு பக்கம் 3 1/2 சென்ட் 2 கண்டங்களாக இருந்தது என்றால் சரியல்ல. தற்போது 2 மேற்கு பக்கம் 3 ½ சென்ட் கிழக்கு பக்கம் 3 1/2 சென்ட் என்று 2 கண்டங்களாக இருக்கிற என்றால் சரிதான்.

நான் முதலில் எனது மனைவி சாரதா முருகேசன் பெயரில் மேற்கு பக்கம் 3 ½ சென்ட் டை 2016 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான். யாரிடம் இருந்து விலைக்கு வாங்கினேன் என்றால் உத்தரபிரசாத். மேற்படி உத்தரபிரசாத்திற்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் பாக பத்திரத்தின்படி. 2004 ஆம் ஆண்டு பாக பத்திரத்தின்படி உத்திரபிரசாத்திற்கு மேற்கு பக்கம் 3 ½ சென்ட் கிடைத்து அதனை நான் 2016 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான்.

மேற்படி உத்தரபிரசாத்திற்கு 2004 ஆம் ஆண்டு பாக பத்திரத்தின்படி. ஈ பட்டிகை 5 வது சொத்தாக மேற்கு பக்கம் 3 ½ சென்ட் கிடைத்து என்றால் சரிதான். மேற்படி ஈ பட்டிகை 5 வது சொத்தினை தான் நான் 2016 ஆம் ஆண்டு எனது மனைவி சாரதா முருகேசன் பெயரில் விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் 2016 ஆம் ஆண்டு எனது மனைவி சாரதா முருகேசன் பெயரில் விலைக்கு வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். **மேற்படி கிரய ஆவணம் எண். 2299/2016 பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிவாசாஆ 1ல் சொத்து விவரத்தில் 7 சென்ட்டில் மேற்கனைய நாளது அளவின்படியும் கைவச அனுபவத்தின்படியும் இருப்பதாக 3 ½ சென்ட் சொத்து என்று குறிப்பிடப்படுகிறது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து கிழக்கனைய 3 ½ சென்ட் என்றால் சரிதான். மேற்படி கிழக்கனைய 3 ½ சென்ட் பொறுத்து பிரதிவாதியின் தந்தை ஜவஹர் எனது மனைவியின் பெயரில் கிரய ஒப்பந்த பத்திரம் எழுதினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கிழக்கனைய 3 ½ சென்ட் பொறுத்து பிரதிவாதியின் தந்தை ஜவஹர் எனது மனைவியின் பெயரில் கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிய ஆவணம் என்றால் சரிதான். **மேற்படி கிரயஒப்பந்த ஆவணம் பிவாசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பிவாசாஆ 2 ல் நான் சாட்சி என்றால் சரிதான்.பிவாசாஆ 2 கிரய ஒப்பந்த பத்திரத்தில் நாளது அளவின்படியும் கைவச அனுபவ படியும் இருப்பதான 7 சென்ட்டில் கிழக்கனைய 3 ½ சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிவாசாஆ 2 னை ரத்து செய்துவிட்டு செலுத்திய முன்பணத்தை திரும்ப பெற்று விட்டதாக பிவாசாஆ 2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 2 ல் இன்று 20.03.2017 அன்று எனக்கு தரவேண்டிய ரூபாய் 50,000 யை பெற்றுக் கொண்டு இனிமேல்

எந்த பிரச்சனையும் இல்லை என்று எனது கைபட எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் மட்டும் செய்தேன். எழுதவில்லை. வழக்கு பட்டிகை சொத்தை உத்தரபிரசாத்திடம் இருந்து விலைக்கு வாங்கியதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து உத்தரபிரசாத்திற்கு எப்படி கிடைத்தது என்றால் பட்டாபடி கிடைத்தது.

வழக்கு பட்டிகை சொத்தினை பொறுத்து உத்தரபிரசாத்திற்கு எவ்வித உரிமை ஆவணமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரபிரசாத்திற்கு பட்டாபடி கிடைத்தது என்றால் பட்டா எண் என்ன என்றால் 1553. மேற்படி உத்தரபிரசாத்திற்கு எந்த ஆண்டு பட்டா கிடைத்தது என்றால் 2004. அதற்கு முன்பாக பட்டா யார் பெயரில் இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. வருவாய் துறை அதிகாரிகளை வசப்படுத்தி உத்தரபிரசாத் அவரது பெயரில் பட்டா வாங்கினார் என்றால் சரியல்ல.

மேற்படி உத்தரபிரசாத் கிரய ஆவணத்துடன் பார்த்து எந்தெந்த ஆவணங்கள் தந்தார் என்றால் எந்த ஆவணங்களும் தரவில்லை. மேற்படி உத்தரபிரசாத்திற்கு கிழக்கனைய 3 ½ சென்ட்டை பொறுத்து எவ்வித உரிமையும் கிடையாது. அது பிரதிவாதியின் தாத்தா பெயரிலான சொத்து என்றால் சரியல்ல. நான் வாசாஆ 1 முதல் வாசாஆ 8 தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் செல்லாத ஆவணங்கள் என்றார் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இதர ஆவணங்கள் மேற்படி செல்லாத ஆவணங்கள் அடிப்படையில் உள்ள ஆவணங்கள் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மேற்படி கிரய ஆவணத்திற்கு பின்பான ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் 5 தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் நான் ஏதேனும் மரங்கள்

வைத்தேனா என்றால் தென்னை மற்றும் வாழை கன்று வைத்தேன் . மேற்படி தென்னை மற்றும் வாழை கன்றுகளை அகற்றிவிட்டேனா என்றால் பிரதிவாதிகள் அகற்றிவிட்டார்கள். நான் பிரதிவாதிகளுக்கு உரிமை பட்ட சொத்தில் 20.12.2022 அன்று அத்து மீறி உள்ளே சென்று தென்னை மற்றும் வாழை கன்று வைக்க முயற்சித்தேன் அதனை பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவம் குறித்து இடத்தினை பார்வையிட்டு காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் ஈத்தாமொழி காவல் நிலையத்தில் இருந்து அழைப்பார்கள் என்று கூறினார்கள். நான் ஈத்தாமொழி காவல் நிலையத்தில் மேற்படி புகார் குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தினை பார்வையிட்டு காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு அது பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து நான் அத்துமீற முயற்சித்ததால் பிரதிவாதிகள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

மொத்த 7 சென்டிற்கும் மேற்கு மற்றும் கிழக்கு பக்கம் 2 கேட்டுகள் உள்ளது என்றால் சரிதான். கிழக்கனைய 3 ½ சென்ட் பிரதிவாதிகளின் கைவசத்தில் உள்ளது என்றால் சரியல்ல. கிழக்கனைய 3 ½ சென்ட் பிரதிவாதிகளுக்கு உட்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை அது அனைத்தும் பொய். பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்து தனக்கு உரிமைப்பட்டது என்று கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல அது எனது அனுபவத்தில் உள்ளது.

நான் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உருத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டுள்ள இவ்வழக்கு நிலைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும்

இல்லை என்றால் சரியல்ல. உரிமை இல்லாத நபரிடம் இருந்து கிரையம் வாங்கி வழக்கு பட்டிகை சொத்தில் பிரதிவாதியின் உரிமைக்கு எதிராக அத்துமீறி முயற்சித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 4 ,26,27,28,29 ஆகிய ஆவணங்கள் எதற்காக வாங்கப்பட்டது என்றால் அது வருடம் தோறும் வங்கிக் கடனுக்கு மற்றும் பத்திரப் பதிவுக்கு வேண்டி வாங்கியது. வங்கிக் கடனுக்கு மற்றும் பத்திரப் பதிவுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாசாஆ 30 PWD யில் இருந்து பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ 30 உத்தரவு எந்த தேதியில் மற்றும் எதற்கு வேண்டி வாங்கியது என்றால் 19.04.2016 மண் அரிக்காமல் இருப்பதற்காக கல்லு கட்ட வேண்டி. மேற்படி உத்தரவு கிழக்கு சொத்திற்கு வாங்கியதா மேற்கு சொத்திற்கு வாங்கியதா என்றால் 2 க்கும் சேர்த்து வாங்கினேன். மேற்படி வாசாஆ 3 தேதியில் கிழக்கனைய 3 ½ சென்ட் நான் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். உத்தரபிரசாத்தின் அனுமதியுடன் வாங்கினேன்.

வாசாஆ 1 மற்றும் வாசாஆ 8 12.02.2018 தேதியிட்டது என்றால் சரிதான். அரசு அனுமதி பெற்று கடன் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான ஆவணம்தான். மேற்படி கிரையம் பெற்ற 12.02.2018 தேதியிட்ட வாசாஆ 1 மற்றும் வாசாஆ 8 க்கு 6 மாதம் முன்பாக 15.05.2018 தேதியிட்ட ஆவணம் வாசாஆ 31 என்றால் சரிதான். வாசாஆ 31ல் கடன் வாங்கிய தேதி உள்ளதா என்றால் தேதி இல்லை. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்க தல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரனை முடிக்கப்படுகிறது.</u>